

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள துணை மின் நிலையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். உடன் திருப்பெரும்புதூர்நாடாளுமன்ற உறுப்பினர் .டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் உள்ளனர்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (15.11.2025) இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2025 புதுடெல்லியில் தமிழ்நாடு நாள் விழாவினைத் தொடங்கி வைத்து கலைநிகழ்க்கிகளை பார்வையிட்டார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.இ.பிரகாஷ் (ஈரோடு), க.ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), தமிழ்நாடு அரசின் உள்ளுரை ஆணையர் ஆஷீஷ் குமார், மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. கு.தமிழ் செல்வராஜன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் ஏற்பாட்டில் காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம்

# தாமல் ஊராட்சியில் இலவச கண் பரிசோதனை - அறுவை சிகிச்சை முகாம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

காஞ்சிபுரம், நவ, 16-

கழக இளைஞர் அணிச் செயலாளர் -துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட- தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அரவிந்த் கண்மருத்துவமனை இணைந்து நடத்தும் இலவச கண் பரி சோதனை மற்றும் கண்புரை அறுவை சிகிச்சை முகாம் இன்று (16.11.2025-ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையில் காஞ்சிபுரம், தாமல் கிராமம், சமுதாயக் கூடத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் தலைமை வகிக்கிறார். காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

எஸ்.மாரிமுத்து, இரா. இளஞ்செழியன், எஸ்.வி. ரமேஷ், மகாலட்சுமி ராஜசேகர், அ.வேலுச்சாமி, எஸ். எஸ்.ஆர்.சசிகுமார், பி.என். ரவி, நா.கருணாகரன், மோகனா இளஞ்செழியன், வளர்மதி மனோகரன், க.செல்வம், டி.எம்.பி.பாலு, எஸ்.அறிவழகன், எஸ்.பாலகிருஷ்ணன், க.தேவேந்திரன், மு.சுரேஷ், த.பூவரசன், அ. புருஷோத்தமன், ரா. நிதிஷ்குமார், டி.கே.மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மருத்துவ முகாமை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார். இந்நிகழ்ச்சியில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., ஜெ.ராமகிருஷ்ணன், சி.கே.வி. தமிழ்ச்செல்வன், சன்பிராண்டு கே.ஆறுமுகம், மேயர் எம். மகா லட்சுமியுவராஜ், படுநெல்லி பி.எம்.பாபு, ப.அப்துல்மாலிக், நித்யா சுகுமார், மலர்கொடி குமார், ஆர். கே. தேவேந்திரன், திவ்யப்பிரியா இளமது, எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, கே.திலகர், எஸ்.சந்துரு, அ. தசரதன், சு.வெங்கடேசன், சசிகலா கணேஷ், சாந்தி சீனிவாசன், செவிலிமேடு எஸ்.மோகன், ராஜலட்சுமி குஜராஜ், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், பெ.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், வழ.கார்த்தி கேயன், அ.யுவராஜ், ப.சுகுமார், எம்.அருள்முருகன், கே.ஏ. இளங்கோவன், வ.மலர் மன்னன், நாத்திகம் நாகராஜன், டி.ஜெய்கணேஷ், ஏ. செல்வி, டி.வெங்கட்ராமன், சி. தாதாகிருஷ்ணன், ஆ.சசிக்குமார், இ.அசோகன், எஸ்.தாஸ், எஸ்.டில்லிபாபு, கே.பி.ராதாகிருஷ்ணன், கிளார் கே.ஏழுமலை, ஜி.சுந்தரம், தி.ராம்பிரசாத், எம்.துரைசாமி, பி.எம். நீலகண்டன், எம்.மகாவீர்சந்த், எஸ்.தமிழ்ச்செல்வன், இ. ஜாபர், எம்.மகேந்திரன், ர. வரதன், சி.எஸ்.விஜயகுமார், டி.ராஜா, ஆ.தினேஷ்பாபு, எஸ்.நவீன், ஆர். விஜயலட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கே.கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.

---

### தூத்துக்குடி வடக்கு மாவட்டம் ஒன்றிய, நகரக்

# கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கடந்த 17.06.2025 அன்று தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் உள்ள விளாத்திகுளம் தெற்கு, கோவில்பட்டி வடக்கு ஆகிய ஒன்றியங்கள் மற்றும் கோவில்பட்டி கிழக்கு நகரம் பிரிக்கப்பட்டு, அவற்றுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்கள் மற்றும் நகரக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விளாத்திகுளம் தெற்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :

1. ஆ.பரமசிவம், மேலத் தெரு, பூசனூர், வடமலை சமுத்திரம்
2. செல்வி ரா.ஜெயலட்சுமி, 1/29, மேலத் தெரு, புளியங்குளம்
3. சோ. மாரியப்பன், நடுத்தெரு, விருசம்பட்டி, வி.வேடப்பட்டி அஞ்சல்.
4. து. ஜவஹர், நடுத் தெரு, வி.வேடப்பட்டி அஞ்சல்
5. மு. நல்லமுகமது, மேலத் தெரு, ரெட்டியபட்டி, அரியநாயகிபுரம்.

**கோவில்பட்டி வடக்கு ஒன்றியம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :

1. க. நேதாஜி, வடக்குத் தெரு, இனாம்மணியாச்சி, கோவில்பட்டி.
2. அ. ஜெயராம், விநாயக நகர், ஆ.சாலைபுதூர், ஆலம்பட்டி அஞ்சல்.
3. ஜோ. ரெஜினா புஷ்பம், இந்திரா காலனி, வில்லிசேரி, கோவில்பட்டி.
4. மு. அம்பலவாணன், முடுக்குமீண்டான்பட்டி, நாலாட்டின்புத்தூர் (அ).
5. வெ. சேதுமாதவன், டி.படர்ந்தபுளி, தோணுகால், கே.ஆர்.நகர் அஞ்சல்.

**கோவில்பட்டி கிழக்கு நகரம்**

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :

1. கிரா. ராமராஜ், 32/40, மந்திதோப்பு தெரு, கோவில்பட்டி2.
2. பெ.சின்னதுரை, ஜோதிநகர் 9 வது தெரு, கோவில்பட்டி2
3. இ.பசுபதி, 36, பாரதி நகர், 128, மேட்டுத் தெரு, கோவில்பட்டி2.
4. சை.அப்துல்காசிம், முகமது ஜாயா புரம் 3வது தெரு, கோவில்பட்டி.
5. செல்வி மு.முனிஸ்வரி, போஸ் நகர், கோவில்பட்டி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 15.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், 40வது வார்டைச் சேர்ந்த ஜெயபிரதீப் சந்திரன், 52வது வார்டைச் சேர்ந்த லூ.பெரியநாயகம், இரா.செல்வகுமார், பீர்க்கன்காரணையைச் சேர்ந்த இ.சேகர், சே.ஹேமாவதி, ஏ.கதிரவன் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 600 018.
நாள் : 15.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை

# குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## திருமுடிவாக்கம் இ.மணி தலைமை! கழகத்தினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ.16-

குன்றத்தூர் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் திருமுடிவாக்கம் இ.மணி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க கிளைக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (16.11.2025-ஞாயிற்றுக்கிழமை), காலை 9.00 மணியளவில், ஆர்.சி.கிராண்ட், சிக்கராயபுரத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி தலைமை வகிக்கிறார்.

மத்திய ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மு.சுப்பிரமணி க. ஏழுமலை மு.செல்வமணி வாசுகிமகேஷ் வே.அரிமா.பரிமேலழகன் K.N.C.சத்தியமூர்த்தி இ.விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறு வனங்களின் துறை அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் குன்றத்தூர் (தெ) ஒன்றியச் செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், மீஞ்சூர் K.G.பாஸ்கர்சுந்தரம் , சரஸ்வதி மனோகரன், ஏ.வந்தேமாதரம், உமாமகேஸ்வரி வந்தேமாதரம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் மத்திய ஒன்றியத்தில் அடங்கியுள்ள மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA2, வாக்குச்சாவடி இமுகவர்கள் BDA உள்ளிட்டோர் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு கூட்ட த்தினை சிறப்பித்துடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத்திருத்தம் குறித்து, என் வாக்குச்சாவடி.., வெற்றி வாக்குச்சாவடி..! பணி குறித்து, நவம்பர்27 இளம் தலைவர் பிறந்தநாள் விழா, 2026 சட்டமன்ற தேர்தல் பணி, கழக வளர்ச்சி பணி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் இந்து சமய அறநிலை துறை அமைச்சர் – சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு தலைமையில் இளம்பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு (SIR ) குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் கழக சட்டத்துறை துணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.விஜயகுமார், சி.மகேஷ் குமார் ,மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய், வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### புதுடெல்லியில் தமிழ்நாடு நாள் விழா!

# 44-வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2025!

## அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.16-

தமிழ்நாடு அரசு செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (15.11.2025) 44வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2025 புதுடெல்லியில் நடைபெறும் தமிழ்நாடு நாள் விழாவைக் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

புதுடெல்லியில் நடைபெறும் 44வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2025 பிரகதி மைதானத்தில் உள்ள "Amphee" கலையரங்கில் நேற்று (15.11.2025) நடைபெற்ற "தமிழ்நாடு நாள் விழா"வை செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்கட்சியானது நவம்பர் 14 ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை 14 நாட்கள் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு (2025) நடைபெறும் 44வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியினை 14.11.2025 (வெள்ளிக்கிழமை) அன்று ஒன்றிய வணிகம் மற்றும் தொழில் அமைச்சக இணையமைச்சர் ஜித்தின் பிரசாதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

இப்பொருட்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கேற்று தங்களது அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் போன்றவற்றை காட்சிப்படுத்தியும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது நாட்டில் தயாரிக்கப்படும் முக்கியப் பொருட்களை சந்தைப்படுத்தியும் வருகின்றன.

நடப்பாண்டில், இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் "Ek Bharat, Shreshtha Bharat" (ஒரே பாரதம், உன்னத பாரதம்) ஆகும். "ஒரே பாரதம், உன்னத பாரதம்" என்பது இந்தியாவின் தேசிய ஒற்றுமையையும், பல்வேறு பண்பாடு களை ஒன்றிணைக்கும் நோக்கத்தையும் கொண்ட ஒரு திட்டமாகும்

இக்கண்காட்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலைத் துறை, தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, சுற்றுலாத்துறை, பூம்புகார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கோஆப்டெக்ஸ், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகிய துறை சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள் ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் தமிழ்நாடு அரசின் மகத்தானத் திட்டங்கள் குறித்தும் அரசின் சாதனைகளை குறித்த புகைப் படங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள் ளன.

இந்த கண்காட்சியில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படியும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து பொது மக்கள் பார்வைக்காக கைத்தறி துறை, தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சி கழகம், குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறித்தும் வேளாண்மை துறை சார்பில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்த அரங்குகள் இந்திய பன்னாட்டு வர்த்தக பொருட்காட்சி இடம் பெற்றிருக்கின்றன.

தமிழ்நாடு நாள் விழாவில் தமிழ்நாட்டின் பாராம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது. இந்த பன்னாட்டு வர்த்தக பொருட்காட்சியில் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரங்கிற்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது போல் இந்த ஆண்டும் சிறப்பு பரிசு கிடைக்கும் என்ற வகையில் இந்த அரங்கம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தேசிய அளவில் சந்தைப்படுத்துவதற்கு இந்த பன்னாட்டு பொருட்காட்சி ஒரு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினை சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் தமிழ்நாடு நாள் விழா நேற்று (15.11.2025) பிரகதி மைதானத்தில் உள்ள "Amphee" கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவினை, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.இ.பிரகாஷ், திரு.கே.ஈஸ்வரசாமி ஆகியோர், உள்ளுரை ஆணையர் ஆஷிஷ் குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர்/இணைச் செயலாளர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் கு.தமிழ் செல்வராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு கலைப் பண்பாட்டுத் துறையின் சார்பில், தமிழ்நாட்டில் புகழ்பெற்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் டெல்லியில் வசிக்கும் தமிழர்கள் உட்பட பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

---

### SIR குறித்து கழக சட்டத்துறை நடத்தும் கூட்டத்தில்

# கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பங்கேற்பு!

## அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING



தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு வருமாறு:


சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) குறித்து கழக சட்டத்துறைச் செயலாளர்-மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் இன்று (16-11-2025 ஞாயிறு) காலை 11 மணியளவில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறும் சிறப்பு பயிற்சிக் கூட்டத்தில், தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர்கள், மண்டலப் பொறுப்பாளர்கள், சென்னை மற்றும் அருகிலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி
தொழில்– முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டாக்டர் துரை. கிருஷ்ணமூர்த்தி
## நவம்பர் 16 (1999)



மருத்துவரான இவர், திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1989ஆம் ஆண்டு சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில், கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, தொகுதி வாழ் மக்களுக்காக பணிபுரிந்து அனைவரின் பாராட்டைப் பெற்றவர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**